குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூர்,
முன்னிலை: – திரு.S.சதாம் உசேன், B.A.L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ), ஓமலூர்.

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 07–ஆம் நாள் செவ்வாய்கிழமை

CMP No: 278/2026
in
Cr.No.398/2026
in
(ஓமலூர் காவல்நிலையம்)

திரு.தமிழ்மணி த/பெ.நடராஜன்,
.

.....மனுதாரர்/எதிரி

//எதிர்//

காவல் ஆய்வாளர்,
ஓமலூர் காவல் நிலையம்,
குற்ற எண்.398/2026,
சட்டபிரிவுகள்.U/s.296(b), 115(2), 118(1), 351(3), 74 BNS Act 2023.

.... எதிர்மனுதாரர்

இம்மனுவானது 04.07.2026–ம் தேதி அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.மகலிங்கம் அவர்கள் முன்னிலையாகியும், குற்ற முறையிடுபவர்/புகார்தாரர் தரப்பில் அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனுவானது பிரிவு 480 BNSS ன் கீழ் மனுதாரரை பிணையில் விட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வழக்கின் வரலாறு சுருக்கம்:**

இவ்வழக்கின் வாதியின் பெயர் சுப்பிரமணி என்பவர் கொண்டையனூர், பொட்டியபுரம் கிராமத்தில் குடும்பத்துடன் குடியிருந்து கொண்டு வருவதாகவும், தனக்கு திருமணம் ஆகி வரதராஜன் லோகேஸ்வரன் என்ற இரண்டு மகன்கள்

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.07 16:38:51 +0530

உள்ளதாகவும், இரண்டு மகன்களுக்கும் திருமணம் செய்து கொடுத்து விட்டதாகவும், தான் கூலி வேலை செய்து வருவதாகவும், கொண்டையனூர் தனது மச்சான் கோவிந்தராஜ் வீடு கட்ட வீட்டின் ஓரமாக மண் கொட்டி வைத்து வீட்டு வேலை செய்து வருவதாகவும், 26.06.2026ம் தேதி மாலை 3.20 மணி சுமாருக்கு பொட்டியபுரத்தைச் சேர்ந்த தமிழ்மணி பிரவீன்குமார் ஹரிவாசன் ஆகிய மூவரும் இரு சக்கர வாகனத்தில் மேட்டுரிலிருந்து கொண்டையனூர் வழியாக வேகமாக வந்தபோது நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டார்கள் என்றும், அப்போது அங்க இருந்த தன் மச்சான் கோவிந்தராஜியும் அவரது மனைவி அலமேலும் ஏண்டா தேவடியா பையா கண்டார ஓலி பசங்களாக என திட்டி கொண்டு தமிழ்மணி என் மச்சான் கோவிந்தராஜின் இடது கன்னத்தில் கையால் அடித்தும், அதை பார்த்த நான் எதுக்குடா அடிக்கிறீங்க என கேட்டபோது ஹரிவாசன் கீழே கிடந்த கல்லை எடுத்து தன் இடது முழங்கால் மீது அடித்து காயத்தை ஏற்படுத்தியும், அப்போது தடுக்க வந்த தன் சித்தப்பா பொருமாளை ஹரிவாசனும் பிரவீண்குமாரும் கையால் மாறி மாறி கன்னத்தில் அடித்தும், அப்போது தன் சம்மந்தி அலமேலு ஏண்டா அடிக்கிறீங்க கேட்டபோது நீ யாரும் கேக்றதுக்கு என கேட்டுக் கொண்டே தமிழ்மணி ஜாக்கெட்டை கிழித்து விட்டான் தாங்கள் சத்தம் போடவே அருகில் இருந்தவர்கள் வருவதை பார்த்து அவர்கள் மூன்று பேரும் மறைத்து வைத்திருந்த கத்தியை காட்டி நீங்க எங்க ஊர் பக்கம் வந்தீங்களா கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டிவிட்டு போய்விட்டார்கள் என்றும், தனக்கு இடது முழங்காலில் இரத்தகாயம்பட்டு தனது சித்தப்பா கோவிந்தராஜி அலுமேலு மற்றும் உறவினர்கள் பெருமாள் ஆகியோர்களுடன் ஓமலூர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்ததாகவும், பிறகு இது குறித்து ஓமலூர் காவல்நிலைய குற்றவழக்கு எண்.398/2026, சட்டபிரிவு.296(b), 115(2), 118(1), 351(3), 74 BNS Act 2023. நாள் 20.05.2026 ன் படி பதிவு செயய்யப்பட்டது.

**<u>மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரர் பிரிவு.U/s.296(b), 115(2), 118(1), 351(3), 74 BNS Act 2023, குற்றத்திற்காக 30.06.2026 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் உள்ளார் என்றும், மனுதாரர் மேற்படி குற்றத்தை செய்யவில்லை என்றும், மேற்படி குற்றம் ஆனது மரண தண்டனையோ அல்லது ஆயுள் கால தண்டனையோ விதிக்க கூடிய குற்றம் இல்லை

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.07 16:38:54 +0530

என்றும், மேலும் மனுதாரர் மதிக்கத்தக்க குடிமகன் என்றும், அவர் மறைந்து கொள்ள மாட்டார் என்றும், நீதிமன்றம் எதிர்பார்க்கும் போதுமான பிணைகளையும், பிணை பத்திரத்தையும், எழுதி தருவதற்கு தயாராக உள்ளார் என்றும், மேலும் எதிரி 8 நாட்களாக சிறையில் இருந்து வருகிறார் என்றும், எதிரியை பிணையில் விடுவித்தால் நீதிமன்றம் விதிக்கும் எந்தவித நிபந்தனைக்கும் கட்டுப்பட தயாராக உள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

<u>அரசு தரப்பின் பதில்</u>

எதிர்மனுதாரர் காவல் துறை மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கு புலன் விசாரணை ஆரம்ப நிலையில் இருப்பதால் எதிரியை பிணையில் விட்டால் அவர் மீண்டும் இது போன்ற குற்றச்செயலில் ஈடுபடுவார் என்றும், எதிரியை பிணையில் விட்டால் சாட்சிகளை கலைக்க நேரிடும் என்றும், எதிரி தலைமறைவு ஆகிவிடுவார் என்றும், எதிரி மீது முன்வழக்கு உள்ளது என்றும், மேற்கண்ட காரணங்களுக்காக மிகவும் கடுமையான ஆட்சேபனை தெரிவித்தனர்.

<u>தீர்வு:</u>

இரு தரப்பும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலினை செய்யப்பட்டது. இவ்வழக்கின் கோப்புகளை பார்க்கும் போது எதிரியானவர் 30.06.2026 அன்று பிரிவு 296(b), 115(2), 118(1), 351(3), 74 BNS Act 2023, குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும், மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரர் இந்த குற்றத்தை செய்யவில்லை என்றும், இந்த வழக்கு பொய்யாக போடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் கடந்த 8 நாட்களாக நீதிமன்ற காவலில் உள்ளார் என்று வாதிட்டார். இவ்வழக்கின் வாதி மருத்துவமனை சிகிச்சை முடிந்து வீடு திரும்பி விட்டார் என்றும், இது எதிரியின் இரண்டாவது பிணைமனு என்றும், மேலும் எதிரி தற்போது பிணையதாரர்கள் கொடுக்க தயாராக உள்ளார் என்றும், மனுதாரர்/எதிரியை நீதிமன்ற காவலில் வைப்பது அவசியம் இல்லாதது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

அரசு தரப்பானது மனுதாரர்ரை பிணையில் விடும் பட்சத்தில் அவர் சாட்சிகளை கலைக்கக் கூடும் என்பதற்கும், தலைமறைவாகிவிடுவார் என்பதற்கும் தகுந்த திருப்திக்காரமான காரணங்களை எதுவும் தெரிவிக்கவில்லை. மேலும் உச்ச நீதிமன்றத்தின் அறிவுரையான **'bail is the rule and Jail is an exception'** என்பதையும் இந்த

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.07 16:38:58 +0530

நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. இருந்த போதிலும் மனுதாரரின் பங்களிப்பை விசாரணையிலும் இந்த நீதிமன்றத்திலும் உறுதி செய்வதற்காக தகுந்த நிபந்தனைகளுடன் மனுதாரர்ரை பிணையில் விடுவது தகுந்ததாக மற்றும் சரியானதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது. முடிவாக இம்மனுவானது கீழ் கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்படுகிறது:

1.மனுதாரர் சொந்தமாக **ரூ.10,000/-த்திற்கு** பிணைப்பத்திரமும், அதே தொகைக்கு **இரண்டு நபர்கள் பிணை பத்திரமும்** எழுதி தரவேண்டும்.

2. மனுதாரர் ஜாமீன் மனு மற்றும் பிணைபத்திரம் **குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 14-ன்** படி இருக்க வேண்டும். மேலும் பிணையதாரர்களின் புகைப்படமானது ஜாமீன் கொடுப்பதற்கு 6 மாதத்திற்குள்ளாக எடுக்கப்பட்ட புகைப்படமாக இருக்க வேண்டும்.

3. எதிரி பிணையில் இருந்து வெளியே வந்த நாள் முதல் தினமும் காலை 10.00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன் ஆஜராகி 20 நாட்கள் கையொப்பம் இடவேண்டும்.

4. மனுதாரர் அரசு தரப்பு சாட்சியங்களை கலைக்க கூடாது என்றும்,

5. மனுதாரர் இது போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட கூடாது என்றும்,

6.மனுதாரர் தலைமறைவு ஆகாமல் விசாரணைக்கு அழைக்கும் போது நீதிமன்றத்திலும் எதிர்மனுதாரர் காவல் நிலையத்திலும் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்த மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

இந்த ஆணை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு ஜூலை 07-ம் செவ்வாய்கிழமை நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.07 ...+05'30'

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.